## பா.ஜ.க.வோடு

# அ.தி.மு.க. கூட்டணிக்குக் காரணமே பழனிசாமியின் குடும்பம்தானே!

## அடிப்படை அறிவும் இல்லாதவர் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

**சென்னை, மே 23 – "பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்ததற்குக் காரணம் பழனிசாமியின் குடும்பம்தானே" என்றும்"படுத்தேவிட்டாரய்யா..." என்ற சொல்லுக்கு மொத்த உருவமே கூவத்தூர் பழனிசாமி என்றும் முதலமைச்சர் நிதி ஆயோக் கூட்டத்திற்குத்தான் செல்கிறார் அமித்ஷா வீட்டுக்கு அல்ல என்ற அடிப்படை அறிவுகூட இல்லாதவர் தமிழ்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் என்பது சாபக்கேடு என்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

ரெய்டைப் பார்த்து யாருக்குப் பயம்? எனச் சூனா பானா ரேஞ்சில் கோழை பழனிசாமி எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கிறார். 2031 சட்டமன்றத் தேர்தல் வரையில் பாஜகவோடு கூட்டணி இல்லை எனப் பேசிய வீராதி வீரர் யார்? கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பாஜக கூட்டணி கிடையாது என விதவிதமான மொழிகளில் நீங்கள் பேசிய வீடியோக்கள் இன்றைக்கும் ட்ரோல் ஆகிக் கொண்டிருக்கிறது. அது உங்கள் முகத்திரையைக் கிழிக்கும் கண்ணாடிதானே! அது உங்களைப் பார்த்துத்தானே சிரிக்கிறது.

தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கைகளுக்கு டெல்லி செல்லாத நீங்கள், உங்கள் மகன் மிதுனுக்காகதானே அமித்ஷாவை போய் பார்த்தீர்கள். ரெய்டில் குடும்பம் சிக்கி விடக் கூடாது என்பதற்காகத்தானே பாஜகவோடு கூட்டணி வைத்தீர்கள். அதற்குக் காரணம் உங்கள் குடும்பம் தானே?

**வீராவேசமாகப் பேசிய 'சூனாபானா'**

"பாஜகவோடு வரும் சட்டமன்றத் தேர்தலிலும் கூட்டணி இல்லை" என வீராவேசமாகப் பேசிய 'சூனா பானா' எடப்பாடி பழனிசாமி, வெள்ளைக் கொடியை அல்ல, காவிக் கொடியை ஏந்திக் கொண்டு போனார். கார்கள் மாறி மாறி கள்ளத்தனமாக அமித்ஷாவை டெல்லியில் போய் பார்த்த சூராதி சூரர் அல்லவா பழனிசாமி!

தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு தேவை என்றால் போகாத பழனிசாமி, தன் குடும்பத்திற்குப் பாதிப்பு என்றதும் டெல்லிக்கு ஓடிச் சென்று அமித்ஷாவின் காலடியில் அதிமுகவை அடகு வைத்தார். கடந்த ஜனவரி 12ம் தேதி எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ராமலிங்கம் தொடர்புடைய இடங்களில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் 750 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப் பட்டது. ராமலிங்கம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தொடர்பாக 26 இடங்களில் நடந்த சோதனையில் 10 கோடி ரூபாய் ரொக்கம், ஆவணங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டது.

அன்று முதல் கைது காய்ச்சலில் பயந்து வெள்ளைக் கொடிக்கு வேலை கொடுத்தவர்தான் பழனிசாமி. அந்த வழக்கில் இருந்தும் அமலாக்கத்துறை, வருமானவரித்



துறை சோதனைகளில் இருந்தும் தப்பிக்கவும் பாஜக கூட்டணிக்குத் தாவியவர்தான் பழனிசாமி.

**"படுத்தே விட்டாரய்யா கூவத்தூர் எடப்பாடி பழனிசாமி!**

"படுத்தே விட்டாரய்யா..." என்ற சொற்களுக்கு உருவமே கூவத்தூர் எடப்பாடி பழனிசாமிதான். அந்த கூவத்தூரில் கற்ற கலையை அமித்ஷா வீட்டு வாசல் வரையில் போய் அரங்கேற்றினார். முதலமைச்சர் நிதி ஆயோக் கூட்டத்திற்குத்தான் செல்கிறார். அமித்ஷா வீட்டுக்கு அல்ல என்ற அடிப்படை அறிவுகூட இல்லாதவர் தமிழ்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் என்பது சாபக்கேடு. நாடகங்களை வைத்து அரசியல் செய்யலாம் எனும் பகல் கனவில் அடுக்கடுக்கானப் பொய்களை வைத்து பித்தலாட்ட அரசியல் செய்து கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு அனைத்திந்திய அளவிலேயே பாஜகவின் பாசிச அரசியலுக்கு எதிராகப் போர்க்குரல் கொடுத்துக் கொண்டிருப்பவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் என்பதை உலகறியும். ஊழலில் முதுகலைப் பட்டம் பெற்று, ஊதாரி ஆட்சி நடத்தி பாஜகவிடம் அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கும் பழனிசாமிக்கு டெல்லி பயணம் என்றால் தவழ்ந்து செல்வது மட்டும் தானே தெரியும்.

ஊர்ந்து செல்லும் உயிரினங்களுக்கே சவால் விடும் வகையில் பாஜகவின் கால்களில் ஊர்ந்து சென்று அடிமை ஊழியம் செய்யும் பழனிசாமி தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து நிற்கும் முதலமைச்சரைப் பார்த்துப் பேச அருகதை இருக்கிறதா?

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் புகார் கொடுத்த பெண்களின் பெயர்களை அரசிதழில் வெளியிட்டுப் பாதிக்கப்பட்ட பெண்களை மிரட்டிப்பார்த்த பழக்கத்தில், அண்ணா பல்கலைக்கழக வழக்கில் ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் NIC நிறுவனமே அளித்த விளக்கங்களை மறைத்து பச்சைப் பொய்யைக் கூசாமல் அடித்து விடுகிறார் பழனிசாமி. அண்ணாநகர் சிறுமி பாலியல் வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளில் ஒருவர் அதிமுகவின் வட்டச் செயலாளர் என்பதை மக்கள் மறந்திருப்பார்கள் நினைத்துக் கொண்டாரா பழனிசாமி?

**பாலியல் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்த பழனிசாமி!**

பொள்ளாச்சி தொடங்கி அண்ணாநகர் பாலியல் வழக்கு வரை பாலியல் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த பழனிசாமி, பெண்களுக்குத் தற்போது தமிழ்நாட்டில் பாதுகாப்பில்லை என விஷமப் பிரச்சாரத்தைச் செய்து மடைமாற்றலாம் என மடத்தனமான அரசியல் செய்தால் மக்கள் நம்பிவிடுவார்களா?

தமிழ்நாட்டில் நீட்டை நுழைத்துப் பல மாணவர்களின் உயிர்கள் பறிபோகக் காரணமான பழனிசாமி, திமுக கொடுத்த அழுத்தத்தையும் எதிர்ப்பையும் சமாளிக்க முடியாமல் கொண்டு வந்ததுதான் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு உள் இடஒதுக்கீடு. அதற்காகச் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் காலதாமதம் செய்த போது ஆளுநரை எதிர்த்து திமுக போராட்டம் நடத்தியது. அன்றைக்கு அதிமுக ஆளுநரை எதிர்க்கக் கூட துணிவில்லாமல் தூங்கி கொண்டிருந்தது. மருத்துவப்படிப்புக்கு மட்டும் இருந்த உள் ஒதுக்கீட்டைப் பொறியியல் உள்ளிட்ட பல்வேறு தொழிற்படிப்புகளுக்கு நீட்டித்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களைப் பலனடையச் செய்து வருவது திராவிட மாடல் அரசு.

நீட்டை நுழைத்து தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையைக் காவு கொடுத்த அதிமுகவினர் வெட்கித் தலைகுனியாமல் வீர வசனங்கள் பேசித் திரிவது வெட்கக்கேடு. நீட், உதய் மின் திட்டம், மூன்று வேளாண் சட்டங்கள், ஒரே நாடு ஒரே தேர்தல், மற்றும் தேசியக் குடியுரிமை சட்டம் (CAA) போன்றவற்றிற்கு ஆதரவு அளித்து துரோகம் என்றால் பழனிசாமி, பழனிசாமி என்றால் துரோகம் என துரோக ஆட்சி நடத்திய துரோகி பழனிசாமி மாநிலத்தின் உரிமைகளுக்காக நாளும் போராடிக்கொண்டிருக்கும் திமு கழகத்தைப் பார்த்து குற்றம் சொல்ல எந்த அருகதையும் இல்லை,

**அடிமை ஆட்சி நடத்திய பழனிசாமி!**

ஆளுநர்களுக்கு அடிபணிந்து அவர்களை நாட்டாமை செய்ய விட்ட அடிமை ஆட்சிதான் பழனிசாமியின் அவல ஆட்சி. ஆளுநர்களின் சண்டித்தனத்தை அடக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பைப் பெற்று இன்று இந்தியாவிற்கே வழி காட்டுகிறது திராவிட மாடல் ஆட்சி! வரிப்பகிர்வு, வெள்ள நிவாரணம், கல்வி நிதி எனப் பல்வேறு வழிகளில் தமிழ்நாட்டின் நிதி உரிமைகளை முடக்கும் பாஜகவைக் கேள்வி கேட்கத் துப்பில்லை. வக்கில்லை. திராணி இல்லை இந்த வீர வசனங்கள் எல்லாம் நமக்குத் தேவைதானா பழனிசாமி?

தமிழ்நாட்டின் எந்த உரிமையைப் பெற பாஜகவுடன் கூட்டணி வைத்தார் என்று சொல்ல எதாவது பதில் வைத்திருக்கிறாரா பாதம் தாங்கி பழனிசாமி? தனது மகனுக்காகவும் சம்பந்திக்காகவும் பாஜகவோடு கூட்டணி வைத்துவிட்டு, பாஜகவின் செய்தி தொடர்பாளராக பழனிசாமி மாறுவதற்குப் பதில் கமலாலயத்தின் ஒரு மூலையிலேயே அதிமுகவின் அலுவலகத்தை அமைத்துக் கொள்ளலாம். பழனிசாமியின் அபத்தங்கள் தமிழ்நாட்டு மக்களிடம் ஒருநாளும் வெற்றியடையாது. மக்களுக்கு உண்மைகள் தெரிந்ததால்தான் பத்து தோல்வி பழனிசாமி எனப் பட்டம் கொடுத்து உட்கார வைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்.

---

## பொதுமக்கள் முழுமையாக முதலமைச்சருக்கு ஆதரவு!

# தி.மு.க. செயல்வீரர்கள் உற்சாகமாக களப் பணியாற்றுகின்றனர்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

புதுக்கோட்டை, மே 23- பொதுமக்கள் முழுமையாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு தான் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். எந்த காலத்திலும் இது போல் தி.மு.க. தோழர்கள் உற்சாகமாக இருந்து பார்த்ததில்லை. தற்போது அவர்கள் உற்சாகமாக இருந்து எங்களுக்கு உற்சாக மூட்டி இருக்கின்றனர்



என்று அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு பேட்டி வருமாறு:-

தி.மு.க.வில் தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது சென்ற இடங்களில் எல்லாம் தி.மு.க. கட்சி தோழர்கள் உற்சாகமாக சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். ஏழாவது முறையாக தி.மு.க. தான் ஆட்சி அமைக்கும். மீண்டும் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் வருவார்.

நிர்வாகிகளிடம் பேசும் போது அரசு சார்பில் என்னென்ன செய்ய வேண்டும் என்னென்ன திட்டங்கள் விடுபட்டு உள்ளது. என்றெல்லாம் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கூறியிருக்கின்றனர். அதையும் நான் குறித்து வைத்துள்ளேன். அரசு சார்பாக செய்ய வேண்டிய பணிகளை செய்து முடிப்போம்.

எதிர்க்கட்சிகள் ஆரம்பத்திலிருந்து தி.மு.க.வையும் தி.மு.க. தலைவரையும் விமர்சனம் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் அதனை தாண்டி தான். பத்து தேர்தல்களிலும் தி.மு.க. வெற்றி அடைந்துள்ளது. அதே போல் இந்த தேர்தலிலும் தி.மு.க. வெற்றி பெறும்.

பொதுமக்கள் முழுமையாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு தான் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். எந்த காலத்திலும் இது போல் திமுக தோழர்கள் உற்சாகமாக இருந்து பார்த்ததில்லை. தற்போது அவர்கள் உற்சாகமாக இருந்து எங்களுக்கும் உற்சாகமூட்டி இருக்கின்றனர்.

என்னிடம் 41 தொகுதி பொறுப்பு கொடுத்துள்ளனர். அதில் இரண்டு மூன்று தொகுதிகளை தவிர மற்ற அனைத்து தொகுதிகளும் தி.மு.க.வுக்கு சாதகமாகத்தான் உள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி தி.மு.க.வுக்கு வேண்டும் என்று அனைவரும் கேட்டுள்ளனர் அதனை முடிவு செய்ய வேண்டியது தமிழ்நாடு முதலமைச்சர் தி.மு.க. தலைவர் தான் நான் முடிவு செய்ய முடியாது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளித்தார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர துறை வடக்கு**

வ.வ.அ.இ.பொ.து.ந.க.எண்.B4/197/2025

**குறுகிய கால மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு கண்காணிப்பு பொறியாளர் (வடக்கு) அவர்களால் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

பணியின் விவரம்:- பெருநகர சென்னை மாநகராட்சியின், மண்டலம் - 5 லாரி நிலையத்தில் உள்ள 452 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்களை வருடாந்திர பராமரிப்புக்காக ஒப்பந்த அடிப்படையில் 90 நாட்களுக்கு பணியமர்த்துதல்

பணியின் மதிப்பு :- ரூ.52,88,400/- முன் வைப்புத் தொகை :- ரூ.53,000/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 02.06.2025 மாலை 03.00 மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 03.06.2025 மாலை 3.15 மணி

மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 2479 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)




ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் கழக மூத்த முன்னோடியும், தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினருமான டி.எஸ்.கல்யாணசுந்தரம் அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக் கூறினார்.

---

## துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான சட்டத்திற்கு எதிரான

# வழக்கை அவசர அவசரமாக விசாரிக்க எந்த அவசியமும் இல்லை!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வாதம்!

**சென்னை, மே 23 - துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்படும் என்று மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு அரசுத் தரப்பில் பதில் அளிக்க போதிய அவகாசம் தராமல் விடுமுறைக் கால அமர்வில் அவசரகதியில் விசாரிப்பது நியாயம் அல்ல என்றும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் கூறியுள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வந்ததால் தமிழ்நாடு அரசு நீதிமன்றத்தை நாடியது. இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்குவது, பல்கலைக்கழகங்களின் வேந்தராக முதலமைச்சரை நியமிப்பது உள்ளிட்ட அம்சங்கள் அடங்கிய 10 சட்ட மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றம் தனக்குரிய சிறப்பு அதிகாரம் மூலம் ஒப்புதல் அளித்தது.

மசோதாக்கள் குறித்து முடிவெடுக்க ஆளுநருக்கு காலக்கெடு விதித்தும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து ஒப்புதல் வழங்கப்பட்ட மசோதாக்கள் அரசிதழில் வெளியிடப் பட்டு அமலுக்கு வந்துள்ளது.

இந்த நிலையில், துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான சட்டத்திற்கு எதிராக நெல்லையைச் சேர்ந்த பா.ஜ.க. நிர்வாகி வெங்கடாசலபதி என்பவர்,



சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய விடுமுறை கால அமர்வில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் காணொலி மூலம் ஆஜராகி வாதிட்டார்.

"துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான யு.ஜி.சி. விதிகளை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, இந்த வழக்கையும் உச்சநீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி தமிழ்நாடு அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் இந்த வழக்கை அவசர, அவசரமாக விசாரிக்க எந்த அவசியமும் இல்லை" என்று மூத்த வழக்கறிஞர் வில்சன் வாதிட்டார்.

பா.ஜ.க.வைச் சேர்ந்த வழக்கறிஞரான மனுதாரர் அரசியல் உள்நோக்கத்துடன் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். அரசின் சட்டங்களுக்குத் தடைக் கோரும் இந்த வழக்கில் தமிழ்நாடு அரசு தரப்பில் பதில் அளிக்க போதிய அவகாசம் தராமல் விடுமுறை கால அமர்வில் அவசரகதியில் விசாரிப்பது நியாயம் அல்ல என்றும் பி.வில்சன் குறிப்பிட்டார்.

"உச்சநீதிமன்ற உத்தரவுப்படியே தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. பா.ஜ.க.வைச் சேர்ந்த மனுதாரரின் வழக்கை தள்ளிவைப்பதால் வானம் இடிந்துவிடாது. யு.ஜி.சி. விதிகளைவிட தமிழ்நாடு அரசின் சட்டங்கள் மேலானவை. எனவே இடைக்காலத் தடை கோரும் மனுவை உயர் நீதிமன்றம் விசாரித்தால், வழக்கை உச்சநீதிமன்றத்துக்கு மாற்றக் கோரிய அரசின் மனு செல்லாததாகி விடும்" என்றும் பி.வில்சன் குறிப்பிட்டார்.

பா.ஜ.க. நிர்வாகி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் முக்கிய ஆதாரங்கள் மறைக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாடு அரசின் சட்டங்களுக்கு தடை விதிக்க கூடாது என்றும் வழக்கில் விரிவான வாதங்களை முன்வைக்க அவகாசம் வழங்க வேண்டும் என்றும் மூத்த வழக்கறிஞர் வில்சன் கோரிக்கை விடுத்தார். இருப்பினும் துணை வேந்தர்கள் நியமனச் சட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், இந்த வழக்கில் நீதிபதிகள் என்ன சொன்னார்கள் என்பதைக் கூட கேட்க முடியாத படி மைக் ஆஃப் செய்யப் பட்டிருந்தது என்று கூறினார்.

துணைவேந்தர்கள் நியமனத்தில் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் விரைவில் மேல்முறையீடு செய்யப்படும் என்றும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்தார்.



கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடியில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் திட்டக்குடி நகரச் செயலாளர், நகர மன்ற துணைத் தலைவர் வி.பி.பி.பரமகுரு, நகர மன்றத் தலைவர் வெண்ணிலா கோதண்டம், மங்களூர் ஒன்றியச் செயலாளர்கள் பட்டூர் வீர.அமிர்தலிங்கம், பா.செங்குட்டுவன், விருத்தாசலம் தெற்கு ஒன்றியச் செயலாளர் தி.வேல்முருகன், கே.என்.டி.சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.